## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாத்தஹேவாஹட்ட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாத்தஹேவாஹட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வலப்பனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மீளளிக்க முடியாத ரூபா 150,000 ஆன 03 கடன்பட்டோர் மீதிகள் தொடர்ந்தும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஒரு மீதியை பதிவழிப்பதற்கும் ஏனைய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | கணக்குகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 03 கணக்கு விடயங்களில் மீதிகள் பயன்பாட்டு பதிவேடுகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 280,599 ஆன வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கணக்கு மீதிகளை பயன்பாட்டு பதிவேடுகளுடன் இணங்கும் வகையில் சரி செய்யப்பட வேண்டும். . |

### 1.6.3 கணக்காய்விற்குத் எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப் பட்டிருந்த ரூபா 30,104,082 கூட்டுத்தொகையான 02 கடன்பட்டோர் மீதிகள், 03 சொத்து மீதிகளுக்குரிய அட்டவணைகள், பதிவேடுகள், கோவைகள் சட்ட ஆவணங்கள் மற்றும் பௌதீக இருப்பு போன்ற தகவல்கள் சமர்ப்பிக்காமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | அட்டவணைகளைத் தயாரிப்பதாகவும்உரித்தினை உறுதிப்படுத்துவதாகவும். | சரியாக அட்டவணைகள் மற்றும் பிற ஆவணங்களை முறையாக அடையாளம் கண்டு உறுதி செய்யப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் கட்டளைச் சட்டம்** | | | |
| | 20 ஆம் பிரிவு | ஆதனங்கள் மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டில் மேற்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதாக. | உரிய காலத்தில் ஆதனங்கள் மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2012 முதல் 2022 வரையான காலப்பகுதியில் காலா வதியான ரூபா 3,454,950 ஆன காலாவதியான 80 வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,933,042 ஆக

இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 51,610,991 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,021,024 | 4,294,081 | 5,273,747 | 3,038,380 | 4,019,720 | 4,521,852 | 5,255,705 | 4,018,046 |
| (ii) | வாடகை | 9,150,000 | 12,401,842 | 11,555,539 | 2,156,008 | 8,660,000 | 7,948,494 | 7,980,473 | 1,309,705 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,780,500 | 3,989,883 | 4,053,583 | 5,284,650 | 2,500,365 | 4,069,082 | 4,275,632 | 5,348,350 |
| (iv) | ஏனைய வருமானம் | 53,456,750 | 54,685,013 | 101,929,581 | 92,786,311 | 65,247,567 | 79,298,006 | 28,901,580 | 140,030,879 |
| | மொத்தம் | 69,408,274 | 75,370,819 | 122,812,450 | 103,265,349 | 80,427,652 | 95,837,434 | 46,413,390 | 150,706,980 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

**சபையின் வருமன சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி**<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 2,475,006 ஆக இருந்தது. அதில் ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 10,000 இணை மிகைத்த 42 ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 1,024,378 ஆன நிலுவை மீதியொன்றாக இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 (3) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து, மீளாய்வாண்டின் இறுதி திகதியில் ரூபா 563,375 ஆன நிலுவை உள்ள ஏக்கர் வரி வசூலிக்கப்படவில்லை. | தோட்ட உரிமையாளரகள் அறிவுறத்தப்பட்டு ள்ளதாக. | நிலுவை ஏக்கர் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(இ) கடை வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 2,156,008 ஆக இருந்ததுடன், அதில் 2014 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான நிலுவை கடை வாடகை ரூபா 963,188 ஆக இருந்தது. | வழக்கு தொடர்ந்து அறவிட்டுக் கொள்வதாக. | சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 19,967,252 ஆக இருந்ததுடன் அதில் நீர்க் கட்டண நிலுவை ஒரு பாவனையாளரிடமிருந்து ரூபா 10,000 இணை மிகைத்த 672 நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 11,704,913 ஆன மீதியொன்றும் இருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை நீர்க் கட்டணம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | முதுனேகடே நீர் திட்டம் 2012 ஆம் ஆண்டு நீர் வழங்கல் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், ரூபா 822,572 ஆன நிலுவை நீர் கட்டணங்களை அறவிடவோ அல்லது கையளிக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பதிவழிப்பதற்காக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக. | நிலுவையில் உள்ள நீர் கட்டணங்கள் குறித்து உரிய நடவடிக்கையொன்றை விரைவில் எடுக்கப்பட வேண்டும். |

**(உ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 930,331 தொகையும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 71,023,337 ஆக இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால்

நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மிகை நிதியை வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்களிலும் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக ஈடுபடுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 77,310,591 கூட்டுத் தொகையான பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் நடைமுறைக் கணக்கில் ரூபா 80,277,541 தொகை விளைவற்று காணப்பட்டது. | எதிர்காலத்தில், அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்படும் என்பதாக. | மிகை பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது சபை அதிகார பிரதேசத்தில் 09 கிராம சேவையாளர் பிரிவுகளை மேவுகை செய்யும் வகையில் ரூபா 70.39 மில்லியனான மதிப்பீடு ஒன்றின் பேரில் வேலை ஆரம்பிக்கப்பட்ட அங்கெலிபிட்டிய மொரகொல்ல நீர் செயற்திட்டத்திற்காக ரூபா 51.16 மில்லியன் செலவிடப்பட்டு 2018 ஆம் ஆண்டு முதல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதியில் ரூபா 19.2 மில்லியன் மேலும் ஒப்பந்ததாரருக்கு கொடுப்பின செய்யப்பட வேண்டியிருந்தது. சபை அதிகார பிரதேசத்தில் கடுமையான நீர் பற்றாக்குறையொன்று காணப்படுவதுடன் பொதுமக்களும் அதிகளவில் பாதிப்பிற்கு உட்பட்டு இருந்தனர். எவ்வாறாயினும் குறித்த செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தற்போது செலவிடப்பட்டிருந்த ரூபா 51.16 மில்லியன் தொகை பயனற்றதாக இருந்தது. இதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,582,000 பெறுமதியான 04 நீர் பம்பிகள் விளைவற்றுக் காணப்பட்டன. | நிதி ஏற்பாடு இல்லாமை காரணமாக செயற்திட்டம் நிறுத்தப் பட்டுள்ளதாக. | விரைவில் நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளப்பட்டு திட்டத்தை நிர்மாணித்து மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் செயல்படுத்தப்படுகின்ற 09 நீர் செயற்திட்டங்களுக்குரிய 4196 நீர் பாவனையாளர்கள் அளவில் இருந்த போதும் அதில் 3558 பாவனையாளர்களுக்கு நீர்மானி பொருத்தப்பட்டு இருக்கவில்லை. | 05 ஆண்டுகளில் தீர்மானிகளைப்பொருத்துவதாக. | தீர்மானிகளைப் பொருத்தி கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 1993 நவம்பர் 18 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபை தலைவரின் 15 ஆம் இலக்க திட்ட சுற்றறிக்கை பிரகாரம் சபையிடமிருந்து விசாரித்து உரிய பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா9,568,407 தொகை நகர அபிவிருத்தி அதிகார சபை முதலீட்டு கணக்கின் பணம் அவ்விருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதாக. | நிதியை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும. |
| (இ) | சபையின் வீதவரிப் பதிவேட்டின் பிரகாரம் குருதெனிய வீதி தெற்கு காணியாக குறிப்பிடப்பட்டுள்ள 39 அலகுகளில் வருடாந்தம் காணிக்காக வீதவரி கட்டணம் அறவிடப்பட்ட போதும் மீளாய்வாண்டின் ஒக்டோபர் 29 ஆம் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் அக்காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு இருந்ததுடன் அக்கட்டிடங்கள் மதிப்பீடு செய்து வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அத்துடன் அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிக்கல்கள் தீர்வு செய்யப்பட்டு உரிய கட்டணங்களை அறவிடுவதாக. | அத்துமீறியமை தொடர்பாக பொருத்தமான நடைமுறைகளை எடுத்து ஆதனங்களை மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான தெல்தோட்ட பள்டீளகம சுதந்திர விளையாட்டரங்கில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முன் பள்ளி பாடசாலை கட்டிடம் 1998 ஆம் ஆண்டு முதல் சுயாதீன முன்பள்ளி பாடசாலை ஒன்றாக சபையில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து இக்கட்டிடம் வெளித்தரப்பினரால் உடன்படிக்கை ஒன்று இல்லாமலும் வாடகை செலுத்தப்படாமலும் முன் பள்ளி பாடசாலை ஒன்றை நடத்திச் சென்றிருந்தனர் எவ்வாறாயினும் இது | உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | அரசின் ஆதனங்கள் முறையாக குத்தகைக்கு வழங்கப்பட வேண்டும். |

தொடர்பாக சபை எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை பயன்படுத்துகின்ற பெறுமதி இனங்கானப்படாத 10 காணித் துண்டுகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 12 பதவிகளில் 25 வெற்றிடங்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் 08 மிகைகளும் காணப்பட்டன. | அரசின் கொள்கைகள் தீர்மானத்தின் பேரில் என்பதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஆ) | 2005 முதல் 2023 ஆம் ஆண்டு வகையான காலப்பகுதியில் மரணித்த இரண்டு சுகாதார தொழிலாளர்களிடமிருந்து மொத்தம் ரூபா 253,390 ஆன கடன் மீதி ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் இருந்து மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக முறையாக குழிகளை உரிய காலப் பகுதியில் சுத்திகரிப்பதற்கும் வெறுமையாக்கு வதற்கும் முடியுமான வகையில் கலிவண்டி சேவை ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருக்கவில்லை. | வேண்டுகோள் இல்லை என்பதாகவும் வெளியேற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று இல்லையென்பதாகம். | சட்டத்தில் கையளிக்கப்பட்டுள்ள பொது மக்கள் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் ,லக்க நிலைபேறான அபிவருத்திச் சட்டத்தின் நியதிகளின் படி, சபையால் நிலைபேறான அபிவிருத்தி நேக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும், அவற்றை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. . | நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாக. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டு செயல்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |